உ

சிவ சிவ

# அன்புநெறி

அன்பே சிவம்

ஆனி (யூன்) 1997 இதழ் - 11

$1.00



தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபுரோ பல் வைத்திய நிலையம்

## DR. ATHI K. SOMASUNDARAM & ASSOCIATES

**டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம் அன் அசோசியேற்ஸ்**

- Cosmetic Dentisty
- Crown & Bridges
- Gum Treatment
- Root Canals
- Bleaching
- Dentures
- Surgery
- *பல்லுக்கு கிளிப்போடுதல்*

**Dr. G. A. Pickergill**
**- Orthodontist**

*Warden Subway இலிருந்து*
*Birchmount Bus Route No. 17*

*இலவச பல் வைத்திய*
*ஆலோசனை*

**Emergency Service**
**Wheel-Chair Access**




**Free Parking**
வாரத்தில் ஏழு நாட்களும்
**9:00am to 9:00pm**

Scarborough Dental Office
**(416) 750-9969**

***2155 Lawrence Ave. East, Suite 10, Scarborough***

## LAW OFFICE OF KUMAR S. SRISKANDA

## *K.V.S.* ஸ்ரீஸ்கந்தகுமார்

***Barrister at Law & Notary Public (Ontario, Canada)***
***Solicitor (England & Wales), Attorney at Law (SriLanka & Belize, C.A.)***

**கனேடிய வழக்கறிஞர்**

10 வருடங்களாக அரச வழக்கறிஞராக கடமையாற்றி அனுபவம் வாய்ந்தவர், குடிவரவு, மேன்முறையீடுகள், அகதிநிலை விசாரணைகள், வீடு, காணிகள் வாங்கவும் விற்கவும்

**எதுவாயினும் தமிழில் தொடர்பு கொள்ளலாம்.**

***Specializing in: Immigration & Sponsorship Appeals, Refugee Hearings, Criminal and Land Lord - Tenant Matters and Real Estate Dealings***

***3850 Finch Ave. E., Suite 410, Scarborough, Ont. M1T 3T6***

**Tel: *(416) 321-9739* Fax: (416) 321-9651**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ


அன்பே சிவம்

# அன்புநெறி

| | | |
|---|---|---|
| மலர் 1 | ஈஸ்வர ஆண்டு - ஆனித்திங்கள் (யூன்) 1997<br>திருவள்ளுவர் ஆண்டு - 2028 | இதழ் 11 |


பொருளடக்கம் பக்கம்

1. குருபூசை நாட்கள் . . . . . . 2
2. சமய வாழ்க்கை . . . 3
3. உள்ளங் கவர் கள்வன். . . . . . 4
4. மன்றச் செய்திகள். . . . . . 5
5. மூன்று வினாக்கள் . . . . . . . 6
6. சேக்கிழார் காட்டும் மயிலை . . . 10
7. வழிபாடு . . . . . . 14
8. இளையார்க்கு ஐந்தெழுத்தின் எளிய விளக்கம்.. 17

சிறுவர் பகுதி :

9. இராமாயணம் . . . . . 20
10. பட்டினத்தார் . . . . . . 23
11. சேக்கிழார் பெருமை. . . . . . . 25
12. திருக்குறள் விளக்கக் கதை. . . . 26

அட்டைப் படம் ... சேக்கிழார் சுவாமிகள்

**அன்புநெறி சந்தா விபரம்**

வருடச் சந்தா $10 - அஞ்சல் செலவு தனி

தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம்

905-566-4822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூன் /யூலை/ஆகஸ்ட் /செப்ரெம்பர் மாதங்களில் குருபூசை நாட்கள்

10-06-97 செவ்வாய் - சேக்கிழார் குருபூசை
08-07-97 செவ்வாய் - மாணிக்கவாசகர் குருபூசை
19-07-97 சனி - விபுலானந்தர் குருபூசை
27-07-97 ஞாயிறு - சோமசுந்தரப்புலவர் நினைவுநாள்
10-08-97 ஞாயிறு - சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை
11-09-97 வியாழன் - பாரதியார் குருபூசை

## விசேட நாட்கள்

10-07-97 வியாழன் - நடேசர் அபிடேகம்
11-07-97 வெள்ளி - ஆனி உத்தர தரிசனம்
16-07-97 புதன் - ஆடிப்பிறப்பு
22-07-97 செவ்வாய் - ஆடிச்செவ்வாய் - 1
29-07-97 செவ்வாய் - ஆடிச்செவ்வாய் - 2
02-08-97 சனி - ஆடி அமாவாசை
05-08-97 செவ்வாய் - ஆடிப்பூரம்-ஆடிச்செவ்வாய் - 3
12-08-97 செவ்வாய் - ஆடிச்செவ்வாய் - 4
15-08-97 வெள்ளி - வரலட்சுமி விரதம்
17-08-97 ஞாயிறு - ஆவணி ஞாயிறு - 1
24-08-97 ஞாயிறு - ஆவணி ஞாயிறு - 2
25-08-97 திங்கள் - கிருஷ்ண ஜயந்தி
07-09-97 ஞாயிறு - ஆவணி ஞாயிறு - 3
10-09-97 புதன் - ஆவணி மூலம்
13-09-97 சனி - ஆவணி ஓணம்
14-09-97 ஞாயிறு - ஆவணி ஞாயிறு - 4 கடைசி

| விரத நாட்கள் | | | | |
|---|---|---|---|---|
| விரதம் | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப்ரெம் |
| அமாவாசை | 4 | 3 | 2 | 1, 30 |
| பௌர்ணமி | 20 | 19 | 17 | 16 |
| சதுர்த்தி | 8, 23 | 8, 22 | 6, 21 | 5, 19 |
| சஷ்டி | 10 | 10 | 9 | 7, 21 |
| கார்த்திகை | 3, 30 | 28 | 24 | 20 |
| பிரதோஷம் | 2, 17 | 1,17,31 | 15, 29 | 14, 28 |
| ஏகாதசி | 1,16,30 | 15, 29 | 14, 28 | 12, 26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த மன்றம்
**Saiva Sidhdhantha Manram, 1008-50 Elm Dr. E.,**
**Mississauga, ON L5A 3X2 Canada (905) 566-4822**

## சமய வாழ்க்கை

அன்பு வாழ்க்கைக்கு வழிகள் எவையெனப் பட்டினத்தார் உபதேசிக்கிறார். அவை

**ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்**
**அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் பல் அறமும் நட்பும்**
**நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி**
**என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே.**

அம்பிகை, விநாயகர், முருகன் போன்ற பல வடிவங்களில் வழிபடுவதெல்லாம் மாதொருபாகனாகிய சிவபெருமானையே. அன்பே உருவானவர் அவர். "அன்பே சிவம்" என்பது திருமந்திரம். அன்புத் தெய்வத்தை வழிபட்டு அன்பைப் பெருக்கிக் கொள்வது நமது வாழ்வை நிறைவுபடுத்தும் செல்வமாகும். பசித்தோர் முகம் பார்த்து வறுமைப் பட்டவரது துன்பத்தை விரைந்து போக்க வேண்டும்.

அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி — திருக்குறள்

பட்டினத்தார் அறங்கள் செய்ய வலியுறுத்துகின்றார். பொறாமை கொள்ளாதிருத்தல், பிறர் பொருளுக்கு ஆசைப் படாதிருத்தல், சினத்தைத் தவிர்த்தல், இனிய வார்த்தைகளைச் சொல்லுதல் என்பனவே அந்த அறங்கள் என்கிறது திருக்குறள்.

அழுக்காஃறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

மேலும் வாழ்க்கைக்கு வேண்டுவது, அருமையான நண்பர்கள். இந் நண்பர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைத் திருக்குறள் கூறுகின்றது. சிரித்து மகிழ்தல் மட்டும் நட்பன்று பிழை செய்யும்போது இடித்து உரைப்பதும், துன்பம் வரும்போது உதவி செய்வதும் நட்புக்கு இலக்கணமாகும்.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

இப்பண்புகளை சிந்தையிலும்,செயலிலும் கொண்டு வாழ்வில் கடைப் பிடிப்போமானால், நாம் சமய வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆவோம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளங்கவர் கள்வன்

**தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த அருள் செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் அன்றே.**

தோட்டை அணிந்த காதை உடையவனாகி, இடப வாகனத்தின் மேல் ஏறிக்கொண்டு, சுத்த வெண்மையான ஒரு பிறைச் சந்திரனைத் தலையிலே சூடி, சுடு காட்டிலே உள்ள விபூதியைப் பூசிக் கொண்டு என் மனத்தை (யான் அறியாமலே) தன்வசம் ஆக்கிக் கொண்டவன், இதழ்கள் விரிந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் முன்னாளில் வணங்கித் துதிக்க, அவனுக்கு அருள் செய்த பெருமையை உடைய திருப்பிரமபுரத்தில்(சீகாழியில்) எழுந்தருளிய பெருமானாகிய இவன் அன்றோ!

இப்பதிகம் சம்பந்தர் மூவாண்டிலே, பார்வதி தேவியார் ஊட்டிய ஞானப்பால் உண்டு பெருஞானம் பெற்றவுடன், பெருமானும் பிராட்டியும் காட்சியளித்தருள, அதனைக் கண்டு இன்ப மேலீட்டினாலே பாடியதாகும்.

காதில் தோடு பிள்ளைப் பெருமானது கண்களுக்கு நன்கு புலப்பட: அதனைச் சிறப்பிக்க "தோடு உடைய செவியன்" எனத் திருவாக்கில் உதித்தலும் அதையே முதலாக வைத்துப் பாடினார். ஏடுடைய மலரால் முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த – இதழ்களையுடைய மலர்களால் முற்காலத்து அருச்சித்து வழிபட்டதனால் இன்று என்னை ஆட்கொண்டு, அருள் செய்த (ஞானப்பால் ஊட்டிய) என்றுமாம். உள்ளம் கவர் கள்வன்–என் மனத்தை நான் அறியாமலே கவர்ந்துவிட்டான். அறியாமல் கவர்ந்ததால் கள்வன் என்றார்.

"விடையேறி"சிருஷ்டியையும், "மதிசூடி" திதியையும், "சுடலைப் பொடிபூசி"சங்காரத்தையுயும், "உள்ளங்கவர் கள்வன்"திரோதானத்தையும், "அருள்செய்த" அனுக்கிரகத்தையும் (ஆக சிவபெருமானுக்குரிய ஐந்து தொழில்களையும்) குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றச் செய்திகள்

### திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

சைவசித்தாந்த மன்றத்தினரால் நடத்தப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் குருபூசை 02–05–97 வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டு வழிபாட்டுடன் குருபூசை ஆரம்பித்து சிறப்புப்பூசை நடைபெற்றது.

தொடர்ந்து மன்ற மாணவர்களின் பேச்சுகள் இடம் பெற்றன. பின்னர் திருநாவுக்கரசர் பாடல்கள் சில பாடப்பெற்றன. இரவு 9 மணிபோல் குருபூசை இனிதே நிறைவு பெற்றது. குருபூசைக்கான பண்ணிசை, மனனப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை

சைவசித்தாந்த மன்றத்தினரால் நடத்தப்பட்ட திருஞானசம்பந்தர் குருபூசை 30–05–97 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டு வழிபாட்டுடன் குருபூசை ஆரம்பித்து சிறப்புப்பூசை நடைபெற்றது.

தொடர்ந்து ஞானசம்பந்தர் பற்றிச் சேக்கிழார் சுவாமிகள் பாடிய சில பாடல்கள் பாடப்பெற்றன. இரவு 9 மணிபோல் குருபூசை இனிதே நிறைவு பெற்றது. குருபூசைக்கான பண்ணிசை, மனனப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

### மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை 11–07–97 **வெள்ளிக்கிழமை** அன்று மிசிசாக்காவிலுள்ள யாழ் கூட்டுறவு இல்லமண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாணவர் பேச்சு, பாடல்கள் என்பனவும் மனன, பண்ணிசைப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வினாக்கள்

(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்)

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

— திருக்குறள் —68

**ஒருவர் தாம் பெற்ற மக்களின் சீலமும் அறிவும் தமக்கு இன்பம் தருவதைவிட, உலக உயிர்களுக்கு உகந்த இன்பத்தை ஊட்டும் என்பதே இக்குறள் கூறும் கருத்தாகும்.** இவ்வுண்மையைப் பின்வரும் வரலாற்றால் தெளியலாம்.

நான் அறிவாளியாக இருக்க வேண்டும் என்று எண்ணுவது எல்லோருக்கும் இயல்பே. தான் மூடனாக இருக்க வேண்டும் என்று யாரும் எண்ணமாட்டார்கள். தன்னைவிட வேறொருவன் அறிஞனாக இருப்பதில் ஒருவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. ஆனால், தன்னைவிட தன் மகன் அறிவுள்ளவனாக ஆவதில் அளவற்ற மகிழ்ச்சி உண்டாகின்றது.

தொண்டை நாட்டில் குன்றத்தூர் என்பது ஒரு பழம் பதி. வளமை மிக்க அப்பதியிலே வேளாளர் குலத்திலே, சேக்கிழார் மரபில் ஒருவர் தோன்றினார். அவருக்கு இரண்டு குமார மணிகள். மூத்தவர் அருண்மொழித் தேவர் இளையவர் பாலறாவாயர்.

இரு மக்களைப் பெற்று இல்லறமாய நல்லறத்தில் நின்ற அவர், மக்கட்குக் கல்வி பயிற்றுவித்தார். மூத்தவராகிய அருண்மொழித்தேவர் அதி நுட்பமான மதிநுட்பம் உடையவராய்த் திகழ்ந்தார்.

தந்தையார் சோழ மன்னவனிடத்தில் தொழில் புரிந்திருந்தார். சோழன் அவரை நோக்கி மூன்று வினாக்கள் வினாவினான். மறுநாள் வந்து விடை கூறுமாறு பணித்தான். "உலகினும் பெரியது எது?" "மலையினும் பெரியது எது?" "கடலினும் பெரியது எது?" இந்த மூன்று வினாக்களையும் எழுதிய ஓலையை எடுத்து வந்து அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இல்லஞ் சேர்ந்தார். இரவெல்லாம் ஆராய்கின்றார். நூல்களை எல்லாம் புரட்டுகின்றார். சுற்றும் முற்றும் பார்க்கின்றார்.

கண்சு ழன்றது கருத்துஞ் சுழன்றது
மண்சு ழன்றது மனமும் சுழன்றது
எண்சு ழன்றது இதயஞ் சுழன்றது
விண்சு ழன்றது விடைவிளங்காமையால்.

என் செய்வார்? திகைத்தார். அரசனுக்கு என்ன சொல்வது? என்று ஏங்கினார். பொழுது விடிந்தது. உரிய காலத்தில் வழக்கம் போல நீராடவில்லை. வழிபாடு செய்யவில்லை. உச்சிப் பொழுதாயிற்று. எழுந்தார். திருநீறு பூசினார். வாடிய உள்ளத்துடன் புறப்பட்டார்.

தந்தையின் வாட்டத்தையும் நாட்டத்தையும் அருண்மொழித்தேவர் கண்டார். பிதாவைத் தொழுதார். முந்தையங் கடவுளாகிய தந்தையே! ஏன் தங்கள் திருமுகம் வாடியுள்ளது? ஆடிய பாதத்தை நினைப்பவர் வாடி வருந்துவான் ஏன்? ஏன் வழிபாடும் செவ்வையாகப் புரியவில்லை? உணவும் உட்கொள்ளவில்லை. தங்கள் வருத்தத்திற்குக் காரணம் யாது? என்று வினவினார்.

தந்தை: என் கண்ணே! நீயோ சிறுபிள்ளை. இது பெரிய விஷயம். உனக்கேன் இந்த விசாரம்? உன்னிடம் சொல்வதனால் என்ன பயன்? அப்பா! அரசர் முனிவு கொள்வார். விலகு, நான் போக வேண்டும்.

அருண்மொழித்தேவர்: என்னையீன்ற எந்தையே! அது என்ன விஷயம்? கருணைகூர்ந்து சொல்லுங்கள். பொன்னம்பலநாதர் தங்கள் உள்ளக் கவலையைத் தீர்ப்பார்.

தந்தை: மகனே மன்னர் என்னை மூன்று வினாக்கள் வினாவினார். உலகினும் பெரியது எது? மலையினும் பெரியது எது? கடலினும் பெரியது எது? என்ற மூன்று கேள்விகளுக்கும் விடை கூறவேண்டும்.

இவைகளைத்தான் இரவெல்லாஞ் சிந்தித்தேன். விளங்கவில்லை. தக்கவிடை கூறவில்லை என்றால் அரசர் தண்டிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண்மொழித்தேவர்: ஐயனே! இதற்கா இவ்வளவு பெரிய ஆலோசனையும் வாட்டமும்! நன்றாக இருக்கின்றது. நீங்கள் சாப்பிடுங்கள். இந்த மூன்று வினாக்களுக்கும் அடியேன் விடையெழுதித் தருகின்றேன். விடையவன் இருக்க விடைக்கு என்ன பஞ்சம்?

தந்தை அதிசயமுற்றார். சிறிது உணவு உட்கொண்டார். அதற்குள் அருண்மொழித்தேவர் ஒரு ஓலையைக் கொணர்ந்து தந்தைபால் தந்தார். அதில் பின்வரும் திருக்குறட்பாக்கள் எழுதப்பட் டிருந்தன.

**உலகத்தினும் பெரியது**

காலத்தினாற் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

**மலையினும் பெரியது**

நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**கடலினும் பெரியது**

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

தந்தையார் மூன்று வினாக்களுக்குந் தக்க விடைகள் திருக்குறளிலிருந்தே தேர்ந்து எடுத்த மகனுடைய அறிவுடைமையை எண்ணி இறும்பூது கொண்டார். எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார். அந்த ஓலையைக் கொண்டுபோய்ச் சோழ மன்னராகிய அநபாயனிடம் தந்தார். மன்னர் பெருமான் அதனை உற்று நோக்கினார். கையெழுத்து அவருடையது அன்று என உணர்ந்தார். "ஐயா! இது யாருடைய எழுத்து?" என்று கேட்டார். பெரியவர் மன்னரை வணங்கி, "வேந்தர் பெருமானே! வினாக்களுக்கு விடை உணராது விழித்தேன். இரவுப் பொழுதையும் சிந்தனையில் கழித்தேன். என் மதியையும் பழித்தேன். என் செல்வப் பிள்ளை இவ்விடையை எழுதிக் கொடுத்தான்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழமன்னர் கேட்டு வியப்பும் நயப்பும் அடைந்தார். உடனே, பல்லக்கு அனுப்பி அருண்மொழித் தேவரை வரவழைத்தார். வரவேற்று உபசரித்தார். அவருடைய திருமுக மண்டலத்தில் பொலியும் அருட்பொலிவைக் கண்டார். அவருடைய பெருமையை நன்கு மதித்தார். அவரைத் தமது அரசாங்கத்தின் முதன் மந்திரியாக அமைத்துக் கொண்டார். குடும்பப் பெயராகிய **சேக்கிழார்** என்ற நாமமே அவருடைய நாமமாக வழங்கலாயிற்று.

சேக்கிழாருக்கு உத்தம சோழப் பல்லவர் என்ற பட்டத்தையும் தந்தார். வாணிதேவி, தான் வாழும் பூவையும், சங்கப் புலவோர் பாவையும், பிரம தேவரது நாவையும், பொதியமலை மேவும் முனிவர் கோவையும் மறந்து சேக்கிழார் திருநாவில் குடி கொண்டனள்.

பூவை மறந்தனள் வெண்டாமரையில்
புகல்தரு சங்கப் புலவோர் சொற்
பாவை மறந்தனள் தேச சுபாடித
பயனை மறந்தனள் பதுமத்தோன்
நாவை மறந்தனள் பொதியமலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனும்
கோவை மறந்தனள் சேவையர் காவல
னார்திரு நாவிற் குடிகொண்டாள்.

அநபாய மன்னர் சிவகதை படியாது அவகதை படிப்பதை அறிந்த சேக்கிழார், மன்னரை இடித்துக் கூறித் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் காட்டும் மயிலை

(பேராசிரியர் சேக்கிழார்தாசன்)

சென்ற இதழ் தொடர்ச்சி .........

சைவ நன்னெறியின் அடிப்படை உண்மைகள் இரண்டு. இப்புவியில் பிறந்தவர்கள் எய்த வேண்டிய பயன்களும் அவ்விரண்டேயாம். அன்பரது திருவேடத்தை அரனெனவே காணவேண்டும். பத்தரது திருவேடத்தைப் பரமேசுவரன் எனவே கண்டு வழிபடல் வேண்டும். இவ்வழிபாடுகளில் சிறந்த அங்கமாவது அவர்களுக்குத் திருவமுதூட்டலாகும். அடியார் வழிபாட்டில் இத்தகைய திருத்தொண்டு செய்த இளையான்குடிமாற நாயனார் முதலாகப் பத்தொன்பது நாயன்மார்களைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார். இவர்கள் அடியார் வழிபாட்டினால் பிறவிப் பயன் பெற்று முத்தி அடைந்தவர்கள். நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின் அது படமாடும் கோயில் பரமர்க்கு ஆகுமன்றோ! மற்றொரு பயன் "கண்ணினால் நல்விழாப் பொலிவு கண்டார்தல் ஆகும்." உடம்பு பெற்ற பயன் முழுவதையும் கண்ணொன்றே தருதல் பற்றி ஏனையவற்றிலும் சிறப்புத் தோன்றக் கண்ணினால் என்றார் நம் தொண்டர்சீர் பரவுவார். மயிலையில் திருஞானப் பிள்ளையார் பாடியருளிய பதிகத்துள் இரண்டாவது முதல் பத்தாவது வரையுள்ள ஒன்பது திருப்பாட்டுக்களிலும் மயிலையில் அக்காலத்தில் நிகழ்ந்த நல்விழாக்களை நம் கண்முன் காட்டி விடுகிறார். இன்றைய திருக்கோயில் நிர்வாகிகளுக்கு இப்பதிகம் பெரிதும் உதவுவதாகும். திருவிழாக்கள் பற்றிய இப்பதிகத்தைச் சிந்திக்கும்போது திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர்த் திருவாதிரை நல்விழாவைப் போற்றி "முத்துவிதானம்" என்று பாடிய திருப்பதிகத்தையும் எண்ணி இன்புறவேண்டும்.

"பூம்பாவையே! திருமயிலையில் அடியவர்கள் திருவமுதூட்டும் பாங்கினைக் காண்பதற்கு வருக! ஐப்பசித் திருவோண விழாக் காணவருக! கார்த்திகைத் திருவிளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்விழாக்காண வருக! திருவாதிரை நன்னாள் காண வருக! தைப்பூசம் காண வருக! மாசிக் கடலாடல் காண வருக! பங்குனி உத்திர நல்விழாக்காண வருக! வைகாசியில் பதினெண்கணங்களின் அட்டமி விழாக் காண வருக! பொன்னூசல் விழாக் காண வருக! பெருஞ் சாந்தி விழாக்காண வருக! என்று இவ்வாறாகத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிவர, அக்குடத்தில் இருந்த எலும்பும் சாம்பலும் சிவபெருமான் கருணையால், பூம்பாவையின் உருவமும் அங்கமும், அழகும் முறையாக நிரம்பி, வளையலணிந்த செங்கைகளோடு, குடம் உடைந்து திருமகளைப் போன்று தோன்றி நின்றாள். பூம்பாவைக்கு விடந்தீண்டி இறப்பு ஏழாண்டில் நிகழ்ந்தது. ஐந்தாண்டுகள் கழிந்து திருஞானப் பிள்ளையார் திருமயிலைக்கு எழுந்தருளினார். ஆகவே பிள்ளையார் திருப்பாசுரம் பாடியவுடன் பன்னிரண்டு வயதுடைய பாவை எழுந்தாள் என்று சேக்கிழார் நயம்படக் காட்டுவார்.

"எடுத்த பாட்டினில் வடிவு பெற்று இருநான்கு திருப்பாட்டு
அடுத்த அம்முறை பன்னிரண்டாண்டளவு அணைந்து"

இங்ஙனம் எழுந்த பூம்பாவையைக் கண்டு நாமும் வியக்கின்றோம். இங்கே அக்காலத்தில் திருமயிலையில் நடந்த திருவிழாக்களை வரலாற்றுச் செய்திகளால் உணரும் போது திருஞானசம்பந்தர் தெய்வ வாக்கு அதனை எங்ஙனம் மெய்ப்பிக்கின்றது என்பது புலப்படும்.

இப்பதிகத்தில் திருஞானசம்பந்தர் ஒன்பது பாசுரங்களில் திருவிழாக்களைக் காட்டுகின்றார். இவற்றுள் கார்த்திகை விளக்கீடு, ஆதிரைநாள், தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும் தமிழ்நாடெங்கும் கொண்டாடப் பெறுவன. இவை மயிலையிலும் விசேடமாக இருந்தன என்பது தெளிவு. இன்றும் அவை விசேடமாகவே மயிலையிலுள்ளன! இதில் ஐப்பசி ஓணவிழா ஸ்ரீராமபிரானால் கொண்டாடப்பட்ட செய்தி மயிலையின் வடமொழிப் புராணம் ஒன்பதாவது அத்தியாயம் 32–34 சுலோகங்களால் பெறப்படும். தமிழ்ப் புராணத்திலும் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவதுநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீராமபிரானால் நடத்தப்பெற்ற செய்தி காணப்படுகிறது. அட்டமிநாள் என்பது சிவ விரதங்கள் எட்டினுள் ஒன்று வைகாசி மாத சுக்கில பட்சம் அட்டமியில் அனுட்டிக்கப்படுவதாகும். உபதேசகாண்டம் சிவவிரத மான்மியச் சுருக்கம் 307–315 பாடல்களில் இவ்விரதம். விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதுவன்றியும் ஒவ்வொரு மாதம் இரு பட்சங்களில் இரு அட்டமி, அமாவாசை, பூர்ணிமை, ஆதிரை ஆகிய ஐந்துமே சிவாலயங்களில் பஞ்ச பருவ உற்சவங்களாயிருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் செய்தியும் ஆதரவாயுள்ளது. வைகாசி மாதம் சுக்கிலபட்ச அட்டமி நாளையே "பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்" என்று சம்பந்தர் குறித்தார் என்று கொள்வதே சிறப்புடைய தென்பார் சிவ கவிமணியவர்கள். பொற்றாப்பு= பொன்தாம்பு= பொன் ஊசல் விழாவாகும். வடமொழியில் இதனை டோலோற்சவம் என்பர். சைவாலயங்களில் ஊஞ்சல் உற்சவம் மார்கழியில் இன்றும் நிகழ்ந்து வருகின்றன. சயாம் நாட்டிலும் திருவெம்பாவைப் பாராயணமும் டோலோற்சவமும் இன்றும் கொண்டாடப் பெறுவதை அறிந்தின்புறுகிறோம்.

பெருஞ்சாந்தி என்பது ஆவணி அவிட்டம் ஈறாக மூன்று, ஐந்து, அல்லது ஏழு நாட்களில் நிகழும் பவித்ரோற்சவமாகிய சம்வத்ஸர பிராயச்சித்தாபிஷேகம் என்று இந்நாளில் நிகழும் விழாவாகும். திருமயிலையில் இன்றும் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக இது நிகழ்ந்து வருவதை நாம் அறிவோம். திருவிழாக் களை நம் சமயம் எங்ஙனம் போற்றியதென்பதை மயிலைப் பதிகத்தின் மூலம் மாண்புறக் காட்டிவிட்டார் மறைக் கொழுந்தாகிய ஞானசம்பந்தர்பெருமான்!

இனி எழுந்த பூம்பாவையைக் கண்டு "எம்பிரான் கருணை இருந்தவாறு என்!" என்று திருவருள் திறத்தினை சிறப்பினை தேவரும் முனிவரும் யாவரும் பணிந்து போற்றி இறைஞ்சித் தொழுதனர். "சமணர்கள் தள்ளாடி வீழ்ந்தார்" என்றார் இங்கே சேக்கிழார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த பூம்பாவையின் அழகு நலத்தைச் சேக்கிழார் காண்கிறார்! நமக்கும் காட்டுகிறார். அவளது குழல், நுதல், புருவங்கள், கண்கள், நாசி, வாய், காது, கழுத்து, முகம், கைகள், கொங்கை, உரோமவல்லி, அல்குள், துடை முழந்தாள் கணைக்கால், பாடு, பாதம் என்று கேசாதிபாதமாகச் சேக்கிழார் இங்கு வர்ணிக்கிறார். (திருஞானசம்பந்தர் புராணம் பாடல்கள் 1095–1108) ஆம்! சிவபெருமான் கருணையால் எழுந்த பாவையாதலின் அழகினுக்கு அணியாய் விளங்கிய அப்பூம்பாவையை நாமும் கண்டு மகிழ அமைத்தார் போலும். இவளது அழகைக் கண்டு இருவரது மனநிலைகளைச் சேக்கிழார் காட்டும் அற்புதத்தை என்னென்பது. யார் அந்த இருவர்? ஒருவர் நான்முகன் படைப்புக் கடவுள். மற்றவர் நம் சிவஞானப் பாலுண்ட திருஞானப் பிள்ளையார். இப்போது பூம்பாவையை எழுப்பியவர்–படைத்தவர் இவர்தானே! இருவரும் படைப்புத் திறம் உடையவர்களாயினும் நான்முகனை விஞ்சிய படைப்பு நம் ஞானப் பிள்ளையார் படைப்பு அல்லவா? பாடலைச் சேக்கிழார் திருவாயால் கேட்போம்:

**எண்ணுலாண்டு எய்தும் வேதாப் படைத்த அவள் எழிலின் வண்ணம்**
**நண்ணு நான்முகத்தாற் கண்டான்; அவளினும் நல்லாள் தன்பால்**
**புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்**
**கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தாற் கண்டார். (1109)**

மானிட வருடம் ஒன்று தேவர்களுக்கு இரவும் பகலும் கொண்டதொரு நாளாகும். அந்நாள் முந்நூற்றறுபது கொண்டது ஒரு தேவ வருடம். அதாவது மனித வருடம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்களுக்கு ஒரு வருடமாகும். அவ்வாறு தேவ வருடம் 12000 கொண்டது தேவ யுகம் ஆகும். தேவயுகம் இரண்டாயிரம், பிரமனுக்கு ஒரு நாளாகும். இத்தகைய நாட்களைக் கொண்ட 100 ஆண்டுகளைத் தன் ஆயுளாகப் பிரமன் பெற்றுள்ளான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு

(அமரர் டாக்டர் மு. வரதராசனார்)

சென்ற இதழ் தொடர்ச்சி ....

சமயங்களின் பெயரால் கோயில்களிலும் வீடுகளிலும் நடத்தப்படும் சடங்குகள் எல்லாம் சடங்குகளே என்று உணரவேண்டும். கடவுள் நெறிக்குப் பயன்படும் என்று முன்னோர்களால் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டவை அந்தச் சடங்குகள். சடங்குகளே முதன்மையானவை என நம்பிவிடக்கூடாது. சடங்குகளைச் செய்வதே போதும் என எண்ணிவிடல் ஆகாது. மன ஒருமைப் பாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உதவும் என்று முன்னோர் சிலர் ஒவ்வொரு குழுவார்க்கும் சடங்குகள் சிலவற்றை ஏற்படுத்தித் தந்தார்கள். அந்தச் சடங்குகள் எல்லார்க்கும் தேவை என்றோ, எல்லாக் காலத்துக்கும் தேவை என்றோ வற்புறுத்தக் கூடாது. அவ்வாறு வற்புறுத்துவதால் நாத்திகம் (கடவுள் மறுப்பு) பெருகுமே தவிர வேறு பயன் விளையாது. சமயங்களில் நல்ல உண்மைகள் இருந்தபோதிலும் பொய்ம்மை பெருகியதற்கு அத்தகைய வற்புறுத்தலே காரணமாகும். கடவுள் நெறிக்கு உதவும் வழிபாடுகள் என்று ஏற்படுத்தப் பட்டவைகளே தவிர, அவைகளே கடவுள் நெறி அல்ல. சமயங்களில் வழிவழியாக வந்த வேடங்களும் அப்படிப்பட்டவைகளே. அவற்றை விரும்புவோர் கொள்ளலாம்; விரும்பாதவர் விடலாம். வற்புறுத்தல் கூடாது. அவரவர் மனம் வளர்ந்த வளர்ச்சிக்கு ஏற்றவாறு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அல்லது அப்பால் செல்லலாம். அவைகளுக்கு முதன்மை கொடுப்பதால், மக்களிடையே பிளவும் பூசலும் வளர்ந்து சமுதாயம் தேங்கி நிற்பதை வரலாறு உணர்த்துகிறது. ஆகையால், கடவுள் நெறிக்குத் தவிர வேறு எதற்கும் முதன்மை தரல் ஆகாது.

பணத்தைத் தருவதாலோ, பணத்தைச் செலவு செய்து சில சடங்குகள் செய்வதாலோ, சில பொருள்களைத் தருவதாலோ, கடவுளின் அருளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை சிலரிடம் உள்ளது. அது மூடநம்பிக்கையாகும். பொருள் செலவு செய்து விடுவதால் கடவுளை மகிழ்விக்க முடியாது. கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை எதிர்பார்த்து உட்கார்ந் திருப்பதாக எண்ணுவது தவறு. கோயில்களும் அந்தக் கட்டடங்களின் பெருமைகளும் உயர வேண்டும் என்ற ஆர்வத்தால் பொருள் செலவு செய்வது ஒருவாறு பொருந்தும். ஆனால் கடவுளின் அருளை இவ்வாறு பொருள் செலவிட்டு விலைக்கு வாங்கிவிட முடியும் என்ற மூடநம்பிக்கை கொண்டு செய்வது பொருந்தாது. கடவுள் நாம் கொடுக்கும் கைப்பொருளை (லஞ்சத்தை) வாங்கிக்கொண்டு, அதற்குக் கைம்மாறாக நமக்கு உதவுவார் என்று எண்ணுவது அறியாமை, வழக்கில் வெற்றிபெற, தேர்வில் தேர்ச்சி பெற, நோயிலிருந்து காப்பாற்றப்பெற, தேர்வில் தேர்ச்சி பெற, வியாபாரத்தில் மிக்க ஊதியம் பெற தொழில் உயர்வு பெற என்றிவ்வாறெல்லாம் நாம் விரும்பும் உதவியைச் செய்வதற்காக நாம் தரும் பொருளை ஏற்றுக் கொள்வார் என்று நம்புவது, கடவுளைப் பற்றிய தவறான கொள்கையாகும். அவ்வாறு பிரார்த்தனைகள்—பொருள் தரும் வேண்டுதல்கள்—செய்வோர் சில வேளைகளில் வெற்றி பெறுதல் உண்டு. அந்த வெற்றிகள் இயல்பாக ஏற்படுகின்றன. அவை செலவான பொருளுக்குக் கைம்மாறாகக் கடவுள் தந்தவை என்று தவறாக எண்ணக் கூடாது. கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்களை வகுத்து, பொதுமையான ஆட்சிபுரியும் ஒரு பெருஞ் சக்தி என்று எண்ண வேண்டும்.

**நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்**
**நினையாது ஒருபோதும் இருந்தறியேன்.**

என்று திருநாவுக்கரசரும்

**நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.**

என்று தாயுமானவரும்,

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே.**

என்று இராமலிங்க வள்ளலாரும் பாடிய பாடல்களை உணர்ந்து அன்பை வளர்த்து வழிபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு ஏன் என்று ஆராயுமுன், நான் யார் என்று தெளிய வேண்டும். சில ஆண்டுகளுக்குப் பிறகு அழியும் இந்த உடம்பு நான் அல்ல, உடம்பின் புலன்களின் வழி இயங்கும் மனம் நான் அல்ல, இவற்றிற்கு உள்ளே விளங்கும் உயிரே (ஆன்மா) நான் என்று உணர வேண்டும். உடம்பு உயிருக்கு ஒரு சட்டை, மனமும் ஒரு சட்டை இந்தப் புறச் சட்டை அகச்சட்டைகளைக் கொண்டு உள்ளே விளங்கும் உயிர் அழிவில்லாதது என்று தெளிய வேண்டும். உடம்பை நான் என்றும், உடம்பைச் சார்ந்த பொருள்களை என்னுடையவை என்றும் தவறாகக் கருதுதல் செருக்கு என்று திருவள்ளுவரால் கடியப்பட்டது.

**யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்.**

என்றுஅவர் கூறும் கருத்து, கடவுள் நெறிக்கு உரியதாகும்.

எந்தக் கருவியையும் பயன்படுத்துவதற்காகவே காப்பாற்றுகிறோம். அந்தக் கருவிக்குத் தலைமை தந்து நாம் அடிமை ஆவதில்லை. உடம்பும் ஒரு கருவியே: மனமும் ஒரு கருவியே. உடம்பு நோயில்லாமல் இருப்பதற்கு நல்ல உணவு தந்து அதைக் காப்பாற்ற வேண்டும். சுவைக்காக விரும்பி உண்டு அதைக் கெடுத்துவிடக் கூடாது. உடம்பு நலமாக விளங்கும் வகையில் அளவு அறிந்து தக்க உணவு தரவேண்டும். உடம்பின் போக்கில் சோம்பலாக இருப்பதுங் கூடாது. இன்பத்திற்காக அலையும் போக்கில் அதைக் கடிவாளம் இல்லாது விட்டு விடவும் கூடாது. அவ்வாறே மனம் என்னும் கருவியையும் அதன் போக்கில் அலைய விடக்கூடாது. அது நம்மை அடிமையாக்கித் தன்போக்கில் நம்மை ஆட்டி வைக்க விடக் கூடாது.

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளையார்க்கு ஐந்தெழுத்தின் எளிய விளக்கம்

(பேராசிரியர் ஆ.தி. முருகவேள் எம்.ஏ)

நம்மையும் நமக்காக இந்த உடம்பு உலகம் முதலான பலவற்றையும் உண்டாக்கி அருளியவன் ஒருவன் இருக்கின்றான். இதனை நாம் நம்பாமல் இருக்க முடியாது. அவனைக் கடவுள் என்று சொல்கின்றோம். கடவுள் எங்கும் பரந்து நிறைந்து நிற்பவன். செறிந்து நிற்பவன். ஆதலால் அவனைச் **சிவன்** என்றும் சொல்லுவர்.

சிவன் எல்லாம் வல்லவன், எண்ணற்ற உயிர்களாகிய நமக்கெல்லாம் வேண்டியவற்றை வழங்கிக் கொண்டிருப்பவன். குறைவில்லாமல், இல்லை என்னாமல் கொடுத்து வரும் கொடைவள்ளல் அவன். அவனது **வல்லமையும், கொடைத் தன்மையும்**, அதாவது **வன்மையும், வண்மையும்** எக்காலத்தும் அவனை விட்டு நீங்காதிருக்கும்.

அவன் தனது வன்மையால் படைத்தல் முதலான தொழில்களைச் செய்கின்றான். யாருக்காக? நமக்காக. தனது வண்மையால் நம்மை வாழவைக்கின்றான். நாம் யார்? நான் நான் என்று சொல்லிக் கொண்டிருப்பவர் நாம். நம் ஒவ்வொருவர் இடத்திலும் நான் என்னும் ஓர் உணர்வு இருக்கிறதல்லவா? அந்த உணர்வுக்கு உரியவர் நாம். 'நான்' என்பதும் 'யான்' என்பதும் ஒன்றே. ஒவ்வொருவர் உடம்பிலும் 'யான்' என்னும் உணர்வினதாக இருப்பது உயிர்.

'யான்' என்னும் உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நாமெல்லாம் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறோம்? நம்முடைய திறத்தினால்தான் உலகத்தில் பணம் சேர்க்கிறோம். வேண்டிய பொருள்களை வாங்குகிறோம், விரும்பியபடி வாழ்க்கையை நடத்தி வருகிறோம் என்றே ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்கிறோம்.

சில சில வேளைகளிலாவது அது உண்மை அன்று என்பது அறிவார்க்குத் தெரியும். எல்லாம் வல்ல கடவுளே பெரிய வண்மையாளன். அவனே தன் வண்மையால் நம் எல்லாரையும் வாழ்வித்து வருகின்றான். நம்மை உலக வாழ்க்கையில் நடத்தி வருகின்றான். அவனே நம்மை **நடத்துபவன்.** அவனது வண்மையே நம்மை **நடத்தி** வருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு வேண்டியதை எல்லாம் நாமே செய்து கொள்ள முடியவில்லையே, ஏன்? நமது அறிவும் ஆற்றலும் அவ்வளவுதான் செய்யமுடிகிறது. அப்படியாக நம் அறிவையும் ஆற்றலையும் ஏதோ ஒன்று தடுத்துக் கொண்டிருக்கிறது. அது நமக்கு ஒரு தடை. நம் அறிவின் விளக்கத்தை மறைக்கும் ஓர் அழுக்கு அது. நமக்கு ஆகாத ஒரு குற்றம். வலிமை மிகுந்த அந்த அழுக்கு அல்லது குற்றத்திற்கு **மலம்** என்று பெயர்.

இந்த மலம் நமக்கு இருக்கலாமா? இருக்ககூடாது. இருக்கிறதே! அதனை எண்ணினான் கருணை வள்ளலாகிய கடவுள் சிவபெருமான். தனது அளவில்லாத வல்லமையால் அழுக்ககைப் போக்கும் முயற்சியாகிய உலக வாழ்க்கையில் நடத்தி வருகின்றான். யான் என்னும் நம் உயிரை இந்த முறையில் சிறிது சிறிதாக மலத்தைப் போக்கி உயர்ந்த இன்ப வாழ்வில் வாழவைப்பான்.

எங்கும் செறிந்துள்ள கடவுள் – **சிவன்**. அவன் m s t þ y hj **வல்லமையும், வண்மையும்** உடையவன். **யான்** என்னும் உணர்வினது உயிர். அதனை உலக வாழ்வில் நடத்திக் கொண்டிருப்பது சிவனது வண்மையாகிய **நடத்தி.** அவ்வாறு நடத்தி வருவது உயிரின் குற்றமாகிய மலத்தை நீக்குவதற்காக.

இந்த உண்மையை இவ்உலக வாழ்க்கையில் ஒவ்வொருவனும் இடைவிடாமல் உணரவேண்டும். உணர்ந்தால் யான் எனது என்னும் செருக்கு ஒழியும். மலம் நீங்கித் தூய அறிவும் பேரின்பமும் விளங்கப் பெறுவோம்.

இந்த உண்மையை நினைவு கொள்வதற்கும் உணர்வதற்கும் சுருக்க வழி, எளிதான வழி ஒன்று உள்ளது.

**சிவன்:** அவன் **வன்மையும், வண்மையும்; யான்** என்னும் உயிர்; உயிரை **நடத்துபவன்** அல்லது **நடத்தி**. **மலம்** இந்த ஐந்தையும் ஒருங்கே நினைக்க அப்பெயர்களின் முதல் எழுத்துக்களை நினைவில் வைத்துக் கொண்டால் போதும். அந்த ஐந்தையும் நினைக்க உதவுவது **'சிவாயநம'** என்ற ஐந்தெழுத்து.

உயிர் இப்போது தான் முழுநிலையில் விளங்கவில்லை. அதனை நினைக்க அதன் அளவைக் குறைத்துச் **'சிவயநம'** எனக் கொள்ளலாம் அல்லவா! சிவனது வல்லமையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்மையாகவும் நீளுவதை நினைக்க அதன் அளபை மிகுத்துச் **'சிவாயநம'** எனக் கொள்ளலும் சிறப்பே.

கடவுளை முதலில் நினைவுக்குக் கொண்டுவரும் போது **'சிவாயநம'** என வரும். நடந்து கொண்டிருக்கும் உலக வாழ்க்கையை முதலில் நினைவுக்குக் கொண்டு வந்தால் அதுவே **'நமசிவாய'** என மாறிவரும். எப்படிக் கொண்டாலும் ஐந்தெழுத்தே.

விரிவானதோர் சிறந்த பொருளைத் தனக்குள் அடக்கி வைத்திருப்பது இந்த **ஐந்தெழுத்து**. ஆதலால் இதனை **மறைமொழி** எனவும் **மந்திரம்** எனவும் சொல்லலாம்.

இனி இந்த ஐந்தெழுத்தைச் சொல்லும் போதெல்லாம் மேலே சொல்லப்பட்ட நமது வாழ்வியல் நினைவுக்கு வரும் என்பது உறுதிதானே! அந்த நினைவோடு சொல்லும்போது தான் ஓதுவதன் பயன் நமக்கு உண்டாகும்.

இந்த ஐந்தெழுத்தின் பொருளை உள்ளபடியே உணர்த்துபவன் ஞான ஆசிரியனாக வந்தருளும் இறைவனே. பக்குவ முதிர்ச்சி உடைய உயர்ந்தோரே அவ்வாறு உணர்த்தப் பெறுவார். இங்குச் சொல்லியது ஐந்தெழுத்தை ஓதும் ஆர்வம் உடைய இளையார்க்குப் பொருந்துவதோர் எளிய பொருள் விளக்கம்.

இந்த அளவிலாவது பொருள் உணர்வோடு திரு ஐந்தெழுத்தை வாய்க்கும் போதெல்லாம் ஓதிவரும் இளையார் வாழ்வில் இறைவன் இன்னருள் பெருகி விளங்கும். உரிய காலம் வரும்போது அனுபவப் பொருளை ஆசிரியனாய் வந்து அருளப் பெறுவர்.

சிவாயநம எனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமையது ஆக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே.

– *திருமூலர் திருமந்திரம், 2718*

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான் அறி விச்சையும்
நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

– திருநாவுக்கரசர், 5: 90: 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பகுதி

## இராமாயணம்

சென்ற இதழ் தொடர்ச்சி....

### மோதிரம் கொடுத்தல்

மரத்தின் மேலே இருந்த அனுமான் கீழே சீதைக்கு முன்னால் குதித்தான். “தாங்கள் யார்? நான் தேடிக் கொண்டிருக்கும் சீதாதேவியா?" என்று வினவினான். பின்னர், “நான் இராமபிரானின் தூதன் இதோ அவர் தந்த அடையாளம்” என்று கூறி இராமர் கொடுத்த கணையாளியைக் கொடுத்தான். “தாங்கள் இங்கு இருப்பதை இராமர் அறியவில்லை அதனால்தான் இன்னும் தங்களை மீட்கவில்லை.” என்று மேலும்சொன்னான்.

சீதை மனம் மகிழ்ந்தாள். கணையாழியைக் கையில் வாங்கிக் கண்ணிலும் மார்பிலும் ஒற்றிக் கொண்டாள். இராமரைக் கண்டதே போன்று மனம் மகிழ்ந்தாள். அனுமனை நோக்கி "நீ நீடூழி வாழ்வாயாக!" என்று ஆசீர்வதித்தாள். பின் தான் வைத்திருந்த சூடாமணி என்னும் ஆபரணத்தை அனுமனிடம் கொடுத்து அதை இராமரிடம் கொடுக்கும்படி பணித்தாள்.

அனுமான் தான் சீதையை இராமரிடம் கொண்டு சேர்ப்பதாகக் கூறினான். ஆனால், சீதை தன் கற்புக்கும் இராமன் ஆண்மைக்கும் மாசு ஏற்படுத்திவிடும் என்று அதற்குச் சம்மதிக்கவில்லை. "இராமர் ஒரு சிறந்த வீரராக இங்கு வந்து இராவணனைக் கொன்று என்னை எடுத்துச் செல்லட்டும்." என்றாள். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இராமர் என்னை வந்து மீட்காவிட்டால் நான் உயிர் வாழ மாட்டேன் என்பதையும் இராமர்பால் தெரிவிக்கவும்.

தாங்கள் சொற்படியே நடக்கிறேன் என்று கூறி அவளை வலம் வந்து கீழே விழுந்து வணங்கி, விடை பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசோக வனத்தை அழித்தல்

அசோக வனத்தை விட்டு வெளியே வரும்போது அனுமானுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. சீதைக்குத் தைரியம் ஊட்டுவதற்கும், இராவணனுக்குப் பயத்தை உண்டு பண்ணுவதற்கும் என்ன செய்யலாம் என்று யோசித்தான். உடனே அந்த வனத்தை அழிக்க ஆரம்பித்தான். மரங்களை வேரோடு பிடுங்கினான். பூச்செடிகளை அழித்தான். கூரைகளை உடைத்தான். அசோக வனத்தைக் காவல் செய்த அரக்கர்கள் இதைக் கண்டு அனுமானைத் தாக்கினார்கள். அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இதை அறிந்த இராவணன் அனுமானை எதிர்க்கும்படி பல வீரர்களை அனுப்பினான். அந்த வீரர்கள் எல்லோரையும் எதிர்த்துப் போர் செய்து அவர்களைக் கொன்றான் அனுமன். அத்தோடு இராவணன் மகன் அட்சயகுமாரனையும் கொலை செய்தான். உடனே இராவணனுடைய வீரப்புதல்வனான இந்திரஜித்து வந்து சண்டை செய்தான். சாதரண அம்புகளினால் அனுமானை ஒன்றும் செய்யமுடியவில்லை. எனவே பிரம்மாஸ்திரத்தினால் அவனைக் கட்டி இராவணன் முன்னிலையில் விட்டான் இந்திரஜித். பிரம்மாஸ்திரத்தை அவிட்கும் வல்லமை அனுமனுக்கு இருந்தபோதிலும் இராவணனைக் காணவேண்டும் என்ற விருப்பத்தினால் அனுமான் ஒன்றும் செய்யாது இராவணனிடம் சென்றான்.

## அனுமன் இலங்கையை எரித்தல்

தன்முன்னே கொண்டுவந்து நிறுத்தப்பட்ட அனுமனை இராவணன் கோபத்தோடு நோக்கினான். நீ யார்? இங்கு வந்த காரணம் யாது? என்று வினவினான். அனுமான் இராவணனை நோக்கி வாலி என்னும் குரங்கரசனது மகனாகிய அங்கதன் அனுப்பிய தூதன். உன்னால் திருடப்பட்டு ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் சீதை எங்கிருக்கிறாள் என்று கண்டு பிடிக்கும்படி அனுப்பப்பட்ட வானரர்களுள் ஒருவன், யான் என்றான் அனுமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரான் வீற்றிருந்த கைலைங்கிரியையும் அசைத்த இராவணன், முன்னொரு காலத்திலே வாலியின் வாலினாலே கட்டப்பட்டவன். இராவணன் அனுமனை நோக்கி வாலியின் சுகம் எப்படி என்று வினவினான். அனுமன் வாலி இறந்த முறைகள் பற்றி எடுத்துச் சொன்னான். மேலும் சுக்கிரீவன் இப்பொழுது அரசன். அவன் தன் நண்பன் இராமனின் மனைவியைத் திரும்ப இராமனிடம் ஒப்படைத்து அவரிடம் மன்னிப்புக் கேட்கும்படி சொல்லி அனுப்பினார் என்றான்.

இதைக்கேட்டு இராவணன் மிகுந்த கோபம் கொண்டான். அனுமனைக் கொல்லும்படி அரக்கரை ஏவினான். இராவணனது தருமநெறி தவறாத தம்பியாகிய விபீஷணன், தூதனைக் கொல்லுதல் கூடாது என்று அறிவுரை கூறினான். எனவே, அனுமனது வாலிலே தீயைக் கொளுத்தி வாலைச் சுட்டு விடும்படி உத்தரவிட்டான்.

அரக்கர்கள் அனுமனைக் கயிறுகளால் கட்டி வாலிலே சீலையைச்சுற்றி எண்ணெய் ஊற்றி நெருப்பைக் கொளுத்தி விட்டனர். அனுமன் ஒரு பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டு மேல் எழும்பினான். அவனைக் கட்டிய கயிற்றைப் பிடித்துக் கொண்டிருந்த அரக்கர்கள்கைகள் ஒடிந்து நிலத்தில் வீழ்நது இறந்தனர். அனுமன் இலங்கை நகர மாளிகை எல்லாம் தீயைப் பற்ற வைத்தான். அனுமனது வாலிலே தீக்கொளுத்திய செய்தியைக் கேட்டுச் சீதை வருந்தினாள். அனுமனைச் சுடாதிருக்கும்படி அக்கினி தேவனிடம் பிரார்த்தித்தாள்.

இலங்கை நகரம் முழுவதும் தீக்கிரையாயிற்று. அனுமனை அடக்க வந்த அரக்கர்கள் யாவரும் அனுமனால் கொல்லப்பட்டனர். சீதையின் கற்பின் திறமையால் அவள் இருந்த அசோக வனத்தில் மாத்திரம் தீ பரவவில்லை. அனுமன் தனது வாலைக் கடலிலே தோய்த்து நெருப்பைத் தணித்தான். பின்னர் அசோகவனம் சென்று சீதையிடம் விடை பெற்றுக்கொண்டு இலங்கையை விட்டுப் புறப்பட்டான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார்

காவிரிப்பூம் பட்டினத்திலே சைவ வேளாண் செட்டி மரபில், சிவநேசகுப்தருக்கும் ஞானகலை அம்மைக்கும் மகனாக பட்டினத்தார் அவதரித்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் திருவெண்காடர் என்பது. பட்டினத்தார் இளமையிலேயே கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவராக விளங்கினார். சிவபக்தி நிரம்பப் பெற்றவராயிருந்தார். உரிய காலத்தில் சிவகலை என்பவரை திருமணஞ் செய்து கொண்டார். அவர்களிடத்து சிவபெருமானே குழந்தையாக வந்து வளர்ந்து வந்தார். அக்குழந்தைக்கு மருதவாணன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். குழந்தை வளர்ந்து பெரியவனாகி குலத் தொழிலாகிய வியாபாரம் செய்து வந்தான். போதிய பணம் சேர்த்து அளவற்ற செல்வத்துடன் வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் மருதவாணன் தாயிடம் ஒரு பெட்டி ஒன்றைக் கொடுத்து அதைத் தந்தையிடம் கொடுக்கும்படி கூறிச் சென்றுவிட்டான். அதைத் திறந்து பார்த்த பொழுது அதற்குள் ஒரு ஓலையில் "காதற்ற ஊசியும் வராது காணுன் கடைவழிக்கே" என்ற வாசகம் எழுதி இருந்தது. அதனைப் படித்த மாத்திரத்தே பட்டினத்தார் அத்தனை செல்வங்களையும் துறந்து, கடுந் துறவியாகச் சென்றார். இவ்வரிய துறவுபூண்ட பட்டினத்தடிகள் பெரும் பித்தர்போலத் திரிந்தார். பிச்சை எடுத்து உண்டார். இவர் இப்படித் திரிதல் தம் குலப் பெருமைக்கு இழுக்கு என்று இவரது தமக்கையார் கருதினார். இதனால் நஞ்சூட்டிய அப்பத்தைக் கொடுத்து அவரைக் கொல்ல நினைத்தார். இதையறிந்த பட்டினத்தார். "தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'' எனக் கூறி தமக்கையார் கொடுத்த அப்பத்தை, தமக்கையாரின் வீட்டின் கூரையில் வைக்க அவ்வீடு எரிந்தது.

மாபெரும் துறவு பூண்டும் தன் அருமை அன்னையாருக்கு ஆற்ற வேண்டிய இறுதிக்கடன்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வனே செய்து முடித்தார். "குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைக்கவேண்டும்" எனச் சொல்லி, தனது அன்னையாரின் உடலைப் பச்சை வாழை மட்டைமேற் கிடத்தி சில பாடல்கள் பாடினார். அன்னையாரின் உடல் எரிந்தது.

வடநாட்டில் உஜ்ஜைனியை பத்ரகிரி என்ற மன்னன் ஆண்டு வந்தான். சுவாமிகள் வடநாட்டு யாத்திரை செய்தபோது அங்கு விநாயகர் கோயிலில் அமர்ந்து நிட்டை செய்து கொண்டு இருந்தார். தன்னை மறந்து தியானத்தில் இருந்தார்.

அந்த நேரத்தில் மன்னவனுடைய அரண்மனையில் முத்துமாலையைத் திருடி வந்த கள்வர்கள், கோவிலைக் கண்டதும், விநாயகப் பெருமான் கழுத்தில் வீசிச் சென்றார்கள் அது பட்டினத்தார் கழுத்தில் வந்து விழுந்தது. கள்வரைக் கலைத்து வந்த காவலர்கள் பட்டினத்தார் கழுத்தில் இருந்த மாலையைக் கண்டு அவரே கள்வன் என்று தீர்மானித்தனர். மன்னவனிடம் தெரிவித்தனர். மன்னவன் அவரைக் கழுவில் ஏற்றிக் கொலை செய்யும்படி கட்டளை இட்டான். சேவகர்கள் அடிகளாரைக் கழுமரத்தின் அடியில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். உடனே அடிகளார் கழுமரத்தைப் பார்த்து

"என்செய லாவது யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே."

என்று பாடினார் பாடி முடித்ததும் கழுமரம் எரிந்து விட்டது. மன்னனும் தன் பிழையையும் அடிகளாரின் பெருமையையும் உணர்ந்து அவரது சீடரானான். பட்டினத்தாரின் சிறந்த சீடர்களுள் பத்ரகிரியும் ஒருவர்.

பட்டினத்தார் மேலும் பல தலங்களைத் தரிசித்தார். ஆங்காங்குள்ள இறைவனைப் பாடினார். திருவொற்றியூரில் சிவலிங்கமாக எழுந்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பாடிய பாடல்கள் பதினொராந் திருமுறையிலுள்ளன. இவை கோயில் நான் மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என ஐந்து பிரபந்த நூல்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

## சேக்கிழார் பெருமை

(சேக்கிழார் திருவடிச் செல்வர் குழுமணிபாக்கம் செல்வ நடராஜ முதலியார்)

சிறந்தது சிறந்தது அறமே சிறந்தது
அறத்தினைச் செய்வோர் வள்ளல் ஆவர்
வள்ளல் பேகனே போர்வையை ஈர்ந்தான்
போர்வையோ உலக மேலின் முகடு
உலகமோ பதினான்கு என்று கூறுப
பதினான்கினும் சிறந்தது இப்பார் பூவுலகமே
பூவுல கோதிரு வராகனின் மீட்பு
வராகமோ திருமாலின் பத்துபிறவியில் ஒன்று
பிறப்போ யாவர்க்கும் பொதுமையில் திகழ்வது
பிறப்பினைப் போக்கச் சான்றோர்வழி காட்டுவர்
சான்றோர் என்பவர் புண்ணியஞ் செய்வோர்
புண்ணியமோ பலநல் வினைக்கு வித்தாம்
வித்தெனப் படுவதே விண்டுவின் வடிவம்
விண்டுவோ பித்தனின் பாகத்துள் அடக்கம்
பித்தன் என்பவன் பிறைசூடிய பெம்மான்
பிறையோ வளர்தலும் தேய்தலும் உடையது
தேயா மூர்த்தியென் றொருவன் உளனெனின்
அவனே அளப்பரும் அரன்எனப் படுவோன்
அரனின் வடிவமே அடியார் வடிவம்
அடியார் வடிவினை அழகுற அமைக்க
தெய்வச் சேக்கிழார் பெருமாற் கல்லது
தேவர் எவராலும் செப்புதற் கரிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள் விளக்கக் கதை

# குறுக்கு வழி

(திரு. நா. மகேசன், அவுஸ்திரேலியா)

மோகன், வேணு, இராமு மூவரும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள். மோகன் அடக்க ஒடுக்கமான பையன். பாடங்களை நன்றாகப் படித்துத் தன் கடமையைச் செவ்வனே நிறைவேற்றும் மாணவன். ஆனால் வேணுவும், இராமுவும் மோகனுக்கு நேர்மாறான குணமுடையவர்கள். படிக்க வேண்டிய நேரத்தில் விளையாடித் திரிந்துவிட்டுப் பிழையான வழிகளிலே சென்று பரீட்சையில் சித்தியடையலாம் என்று கருதுகிறவர்கள். ஆனால் இவர்கள். மூவரும் சிநேகிதர்கள். ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப் பேசுவார்கள். தினமும் கூடி விளையாடுவார்கள்.

வேணுவும், இராமுவும் பேராசை பிடித்தவர்கள். தாம் பெரியவர்களாக வளர்ந்ததும் பெரிய உத்தியோகங்களில் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆனால் படிப்பென்றால் அவர்களுக்கு வெறுப்பாகவே இருந்தது. கடினமாக உழைத்துப் படிக்காமல் குறுக்கு வழியிலே சென்று பரீட்சை எழுதலாம் என்று எண்ணினார்கள்.

ஒரு நாள் மூவரும் விளையாடிக் கொண்டிருந்த போது, மோகன் வீட்டுக்குப் போய் படிக்க வேண்டும் என்று கூறினான். அப்போது வேணு, "மோகன் நீ படிக்க வேண்டும் என்று சொல்லும்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது, நீ எங்களுக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்." என்றான். "உதவியா? என்ன உதவி? பாடம் சொல்லித் தர வேண்டுமா?" என்று ஆவலோடு கேட்டான் மோகன்.

"பரீட்சை தொடங்கி விட்டது, இப்போது பாடங்கேட்டால் பரீட்சை எழுத முடியுமா? என்றான் இராமு. அப்படி என்றால் என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்." என்று கேட்டான் மோகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ எங்கள் இருவருக்கும் உதவி செய்யவேண்டும்." என்றான் வேணு. "அதாவது, உன் மறுமொழிகளைப் பார்த்து எழுத விடவேண்டும்". என்று விளக்கம் கொடுத்தான் இராமு.

இதைக் கேட்ட மோகனுக்குப் பெரும் திகைப்பாக இருந்தது. தன்னுடைய நண்பர்களுடைய அறியாமையை நினைத்து அவன் வருந்தினான். "பார்த்தெழுதுவது கூடாத பழக்கம். அதனால் ஒரு நன்மையும் கிடையாது. பிழையான செயலைச் செய்து அகப்பட்டுக் கொண்டால், எல்லோருக்கும் துன்பம் வரும். " என்று பலவாறாகச் சமாதானம் சொன்னான் மோகன். ஆனால் வேணுவும் இராமுவும் கேட்கவில்லை. அவர்கள் "என்ன மோகன் நீ எங்களோடு இவ்வளவு சிநேகிதமாக இருந்தும் இப்படியா சொல்கிறாய். நீ எங்களுக்கு உதவி செய்யக் கூடாதா? நாங்கள் பரீட்சையில் சித்தியடைந்தால், நீ எங்களுக்கு ஒரு நல்ல செயல் செய்தவனாக மாட்டாயா?" என்று வாதாடினார்கள்.

"உங்களைப் பார்த்து எழுதவிட்டால், நான் உங்களுக்கு நன்மை செய்கிறேன் என்றா நினைக்கிறீர்கள். நீங்கள் எனது மறுமொழிகளைப் பார்த்து எழுதினால், உங்களுக்குப் பிற்காலத்தில் நன்மை வராது. நீங்கள் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள மாட்டீர்கள். உங்களுடைய அறியாமை, நான் உங்களைப் பார்த்தெழுத விடுவது ஒரு நல்ல செயல் என்று எண்ணத் தூண்டுகிறது. இது ஒரு தீய செயல் என்று நீங்கள் உணர வேண்டும். அதுமட்டு மல்ல, பரீட்சையில் பார்த்தெழுதிச் சித்தி அடைவது ஒரு நல்ல செயல் என்றும் நீங்கள் நினைக்கிறீர்கள். இவையெல்லாம் உங்கள் அறியாமையினால் வருகின்ற நல்வினை தீவினைகள். இவை கடவுளுக்கு ஏற்காதவை. நான் இதற்கு இணங்கமாட்டேன்" என்று திட்டவட்டமாக விளக்கிச் சொன்னான் மோகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நண்பருக்கு, ஒரு நண்பன் உதவி செய்வது நல்வினைதானே, வேண்டிய நேரத்தில் உதவி செய்யாமல் இருப்பது தானே தீவினை." என்று கோபித்தான் வேணு.

நீண்ட ஒரு பெருமூச்சு விட்டான் மோகன். "நான் கடவுளை நம்பி வாழ்பவன். பரீட்சையில் சித்தி அடைவதும், சித்தி அடையாமல் இருப்பதும் அவன் செயல் என்று நம்புகிறவன். ஆனால் என் கடமையைச் சரியாகச் செய்கிறேன். பலன் எது வந்தாலும் எனக்குச் சரிதான். சென்றவாரம் நாங்கள் படித்த திருக்குறளை மறந்து விட்டீர்களா?"

**"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."**

"நீயும் உன்குறளும். ஆபத்து நேரத்தில் உதவாமல், திருக்குறளைச் சொல்வதில் என்ன பயன்?" என்றார்கள் வேணுவும் இராமுவும்.

"இந்தத் திருக்குறளின் பொருள் புரியாமல் நீங்கள் பேசுகிறீர்கள். அறியாமை காட்டுகின்ற நல்ல செயலும், தீய செயலும் மனிதருக்குக் கூடாதவை. அதைத் தெரிந்து கொள்ள நாம் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து வணங்க வேண்டும். அப்போது நமது செயல்களால் ஒரு கேடும் வராது." என்று குறளை விளக்கினான் மோகன்.

"உன்னுடைய சிநேகம் இன்றோடு தொலையட்டும்" என்று சொல்லியபடி மோகனை விட்டு அகன்றார்கள் வேணுவும் இராமுவும். "இவர்களுக்குக் கடவுள்தான் நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டான் மோகன்.

வெளியீடு: சைவசித்தாந்த மன்றம் – (905) 566–4822
ஆசிரியர் : திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
அச்சு வடிவமைப்பு மற்றும் மின்கணனி, தொழில்நுட்ப
ஆலோசகர்: திரு.வி. விசுவபாரதி, பாரதி பதிப்பகம் (905) 566–4822
நிர்வாக ஆசிரியர்: திரு. தி. விசுவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LAW OFFICES OF

**YASO SINNADURAI**

**Barrister & Solicitor, Notary Public**

**யசோ சின்னத்துரை**

பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

**Attorney - At Law, Sri Lanka and Solicitor, England**

| Tel: (905) 306-1100 | Tel: (416) 265-3456 |
|---|---|
| Fax: (905) 306-0594 | Fax: (416) 265-2770 |
| 3038 Hurontario St, Suite 203<br>Mississauga, Ontraio L5B 3B9 | 2555 Eglinton Ave. E., Suite 204<br>Scarborough, Ontario M1K 5J1 |

**K. K. ELECTRONICS**

சகலவித மங்களகரமான வைபவங்களையும் நவீனமுறையில்
3CCD DIGITAL CAMERA மூலம் வீடியோவில் பதிவு செய்து
கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
COMPUTER VIDEO MACHINE
உபயோகித்து மிகச்சிறந்த படத்தொகுப்பு (Editing)
வீடியோ படப் பிடிப்புத் துறையில் 15 வருட அனுபவம்

தொடர்புகளுக்கு:

**P. குழந்தைவேலு**

கே. கே. எலெக்ரோனிக்ஸ்

*TEL: (416)429-8417*

*566-9776*

- Still Photography
- Video Filming
- Titling
- Video Editing
- Video Duplications

வீடியோ பிரதிமாற்றம்
**Video Transfer**
(Any System to Any System)

**செல்வசேகரா**

நகைமாளிகை

*Selvasegara Jewellers* Canada Ltd.

**22 கரட் தங்கநகைகளின் முன்னோடிகள்!**

*The Leaders in 22K Gold Jewellery!*

*Tel:* **(416) 285-7269**

*2347 Eglinton Ave. E., Scarborough, Ontario*
*(1 Block West of Kennedy)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMBIKA

**JEWELLERS LTD.**

*Finest Quality 22k Gold & Diamond Jewellery*
*Expert Custom Jewellery & Repairs*

நம்பிக்கையும் நாணயமும் மிக்க தரமான நகைகளுக்கு நாடவேண்டிய இடம் மிசிசாக்காவில் முதன் முதல் உருவான...

## அம்பிகா

நகை மாடம்

| 2388 Eglinton Ave. E<br>Scarborough, Ont.<br>Tel (416)751-1364 | 25 Agnes Street, Unit 1,<br>Mississauga, Ont. L5B 3X7<br>TEL: (905) 270-6921 | 3410 A Weston Road<br>North York, Ont.<br>Tel. (416) 746-9838 |
|---|---|---|

# THARSHANAS
**SUPERMARKET**

உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்யும் வண்ணம்
மிஸ்ஸிஸாகாவில் அமையப்பெற்ற ஸ்தாபனம்

## தர்ஷனாஸ்
சுப்பர் மார்க்கட்

SRILANKAN, EAST INDIAN, CANADIAN FOOD ITEMS

**Tel:(905)270-7576** Fax:(905)270-7838

**29 Dundas Street East, (Signature Plaza), Mississauga, Ontario L5A 1V9**

**BRANCH: 3413 Fieldgate Drive Mississauga, ON L4X 2J4**

**Tel.(905)625-8152**

## விஜயாஸ் சில்க்

## VIJAYA'S SILK

மங்கையர் மனம் கவரும் நவநாகரிக பட்டாடைகள்
சிறுவர் சிறுமியருக்கான ரெடிமேட் உடைகள்
ஆண்களுக்கான பட்டு வேட்டிகள்

**COSMETIC JEWELLERIES**

**TEL: (905) 273-7997** FAX: (905) 273-7323

**27 Dundas Street East, (Signature Plaza)**
**Mississauga, Ontario L5A 1V9**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org